கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண்       130/2024

வாதி தரப்பு சாட்சி –1  செல்லப்பன்  திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 03.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**1 முதல் 3 வரையான பிரதிவாதிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். யார் யாருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கருப்பன், ராசம்மாள், கனகராஜ் மற்றும் வருவாய்துறை அதிகாரிகளுக்கு எதிராகவும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது நிலத்தை மீட்டு கொடுக்கவும், பட்டா மற்றும் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தை இரத்து செய்யவும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பாட்டனார் பெயர் செல்லப்பன் என்றால் சரிதான். மேற்படி பாட்டா செல்லப்பனுக்கு வீரப்பன் மற்றும் பழனி ஆகிய இரு மகன்கள் என்றால் சரிதான். வேங்கடத்தம்மாள் மற்றும் சின்னம்மாள் அவரது மகள்கள் என்றால் சரிதான்.

2. எனது பாட்டனார் செல்லப்பன், எனது தந்தை மற்றும் எனது சித்தப்பா ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் தேதி நியாபகம் இல்லை. சுமார் 10 வருடங்களுக்கு மேல் இருக்கும். எனது தந்தை பழனி உயிருடன் இருக்கும் போது எனது பெயருக்கு ஒரு தான செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மென்ட் ஆவணம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான். வா.சா.ஆ.2ன் அசல் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதும் போது நானும் பத்திர அலுவலகம் சென்றேனா என்றால் எனது தந்தை அழைத்தார். நானும் சென்றேன். வா.சா.ஆ.2 ஆவணத்தின் உள்ள சங்கதிகள் எனது தந்தை சொல்லி அதன்பேரில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.2 ஆவணத்தில் நானும், எனது தம்பி வீரப்பன் என்பவரும் 1972ம் ஆண்டு வாய்க்காரராக பாகம் பிரிக்கப்பட்டதில் என் பெயரில் பட்டா ஏற்பட்ட நிலம் என்று எனது தந்தையால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகம் பிரிக்கப்பட்ட எனது தந்தைக்கு பிரிந்த நிலத்தை தான் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் எனக்கு தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் எனத தந்தை எனக்கு எழுதி கொடுத்த சொத்துக்களுக்கு பட்டா எனது பெயரில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி எனது பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தாவா சொத்தில் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. இந்த வழக்கில் எனது தந்தைக்கும் எனது சித்தப்பாவிற்கும் எந்தெந்த சொத்துக்கள் தானமாக வழங்கப்பட்டது என்ற விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தந்தைக்கு கிடைத்த பூர்வீக சொத்துக்களையும், அவருக்கு சுயமாக பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து எனக்கு தானசெட்டில்மென்ட் செய்துள்ளாரா என்றால் எனது தந்தை மற்றும் எனது தாயார் வழி பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை தான் எனக்கு தானசெட்டில்மென்ட் செய்து வைத்தார். எனது தந்தை எதுவும் சுயமாக சம்பாதிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தந்தையால் சுயமாக கிரையம் பெறப்பட்ட சொத்தை தானசெட்டில்மென்ம் செய்வதாக வாசகம் உள்ளதா என்றால் உள்ளது.

5 வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி எனது தந்தையும், எனது சித்தப்பாவும் கடந்த 1972 ம் வருடமே வாய்க்காரராக பாகம் பிரிவினை செய்து கொண்டார் என்றும், அதன்படி எனது தந்தைக்கு பிரிந்த பாகத்தை மட்டுமே வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனக்கு தானசெட்டில்மென்ட் செய்துள்ளார் என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் மற்றும் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் சொத்துக்கள் பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டதால் வீரப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கோ, எனது தந்தைக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**